# செய்திமடல்

டாக்டர். C. அசோக்குமார்
Mob. No: 977976 – 9345261
E-mail: camsnepal77@gmail.com

Jeetpursimara -7 , Jeetpur,
Bara, Nepal
29.01.2024

கிறிஸ்துவிற்குள் பிரியமானவர்களே!

… "உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராய் இருக்கிற" வல்லமையுள்ள தேவக்குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இந்த புதிய வருடத்தின் தொடக்க நாட்களில் உங்களை வாழ்த்துகிறேன்.

எனது முந்தைய செய்தி மடலை தொடர்ந்து, தேவன் எங்களுக்கு காண்பித்த புதிய பாதை, அதில் நாங்கள் பயணித்த தூரம், அதினால் ஏற்பட்ட தாக்கம் (Impact) ஆகியவற்றை நீங்கள் அறிந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தும்படியாக உங்களுக்கு தெரிவிப்பதின் மூலம், நானும் தேவனை ஸ்தோத்தரித்து மகிமை படுத்துகிறேன். "அவர் பெருக நான் சிறுக வேண்டும்".

மருத்துவ மிஷனரியாக தேவனுடைய திட்டமான அழைப்பின் அடிப்படையில் 20.08.2004 முதல் தேவன் சுட்டி காட்டிய பாதையில் எனது ஓட்டத்தை தொடங்கிய நான், கடந்த 20 ஆண்டுகள் பலவித பயிற்சி பட்டறைகளின் மூலம் புடமிடப்பட்டு, கர்த்தர் என்னை பயன்படுத்தி நடத்தி வந்த பாதைகள் குறித்து எனது முந்தைய செய்திமடல் மூலம் உங்களுக்கு தெரியப்படுத்தினேன். 2023 நவம்பர் 13-ம் தேதி முதல் எனது ஓட்டத்திற்காக புதிய பாதை தேவனால் ஆயத்தப்படுத்தப் பட்டதால், அதுகுறித்து காரியங்களை அறிந்து கொள்ள, என்னுடன் தியாகத்துடன் ஓட தயாராகி தங்களை அர்ப்பணித்துக் கொண்ட சகோதரர்களுடன், தேவனுடைய பாதத்தில் சில நாட்கள் எங்களை ஒடுக்கி அமர்ந்து இருந்து அவருடைய முகத்தை நோக்கி பார்த்த போது நாங்கள் பயணிக்க வேண்டிய பாதை "காசி முதல் காட்மாண்ட்" வரையிலான கரடு முரடுகளும், மேடு பள்ளங்களும், முடியுமா! என்று நாங்கள் மலைத்து நிற்கும் அளவிற்கான செங்கடலையும், எரிகோவின் மதில்களையும் கொண்ட மாறுபட்ட பாதை என்பது தேவனால் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. கீழ்படிந்து இணைந்து பயணிக்க அர்ப்பணித்துக் கொண்ட 9 சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினருக்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். உங்கள் ஜெபவேளைகளில் அவர்களை நினைத்து, அவர்களுக் காகவும் ஜெபித்திட வாய்ப்பாக அவர்களுடைய பெயர் மற்றும் புகைப்படங்களை நீங்கள் பார்த்து தெரிந்து கொண்டு ஜெபிப்பதற்கு வசதியாக பிரசுரிக்கிறேன்.

1. சகோ. டேனியல் ஜெபகுமார், குடும்பம்
2. சகோ. மேக்பகதூர், குடும்பம்
3. சகோ. மகேஷ், குடும்பம்
4. சகோ. சுதேஷ்திங், குடும்பம்
5. சகோ. ரம்பகதூர் (ஆசிஸ்), குடும்பம்
6. சகோ. கேசவ்ரே, குடும்பம்
7. சகோ. ராம்காந்த் சவுத்திரி, குடும்பம்
8. சகோ. சுகுமாரன் போலன் (லாசாங்), குடும்பம்
9. சகோ. விஜய்



வேலூர் CMC மருத்துவ கல்லூரியில் மகளிர் மகப்பேறு சிறப்பு சிகிச்சையில் முதுநிலை பட்டம் பெற்ற பின் கல்லூரி விதிகளின்படி உத்திர பிரதேசத்தில் Kachwa கிறிஸ்தவ மருத்துவ மனையில் Bond சர்வீஸில் மருத்துவராக பணியாற்றி வரும் எனது மனைவி Dr. ஏஞ்சல் தனது Bond சர்வீஸ் பணிக்காலம் முடிந்தவுடன் இந்த ஊழியத்தில் எங்களுடன் பணி செய்ய ஒப்புக் கொண்டது, எங்களை அதிக உற்சாக மடைய செய்தது. தேவ இராஜ்யம் விரிவடையட்டும். அவருடைய நாமத்திற்கு மட்டும் மகிமையுண்டாவதாக.

ஸ்தாபனங்களை உருவாக்கி ஆஸ்தி பெருக்கங்களை ஏற்படுத்தும் முயற்சிகள், தேவனுடைய பாதையில் இருந்து விலகி பயணிக்க வேண்டிய சூழ்நிலைக்குள் கொண்டு வந்துவிடும் என்பதையும், அதுவே பின் நாட்களில் தெய்வ பயமில்லாத சொந்த குடும்பத்தினரின் ஆளுமைக்குள் (Ownership) கொண்டு வந்துவிடும் என்பதையும், பரிசுத்தாவியானவர் எனக்குள் எச்சரித்துக் கொண்டிருப்பதை உணர்கிறேன். தேவன் சுட்டி காட்டியுள்ள பகுதிகளில், எவ்வித மருத்துவ சேவையும் கிடைக்காமல் அனுதினம் மாண்டு போகிறவர்களையும், “இயேசு கிறிஸ்துவில் ஜீவன்”

என்பதை அறிந்து கொள்ளாமல் இருளின் ஆதிக்கத்தில் சிக்கி தவிக்கிறவர்களையும், விடுதலை வாழ்விற்கு நேராக வழிகாட்டி, தேவைபடும் இடங்களில் தேவனை ஆராதிக்க வழிவகைகளை ஏற்படுத்துவதன்றி பிறிதொன்றையும் செய்திட துணிச்சல்கள் எங்களுக்கு வராதிருப்பதாக. மேற்கண்ட பணிகளை தடையின்றி செய்திடவும் உடன் இணைந்து செயல்படுகிறவர்களுக்கு உத்தரவாதமாக (Accountability) இருந்திடவும், தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு கீழ்படிந்தும் (In Obedience to the Law of the Land) ஒரு அமைப்பு ஏற்படுத்துவது அத்தியாவசியம் என்பதால் தேவ இராஜ்யம் விரிவடை வதற்காக கேபா அப்போஸ்தல மிஷனரி ஊழியர்கள் (CAMS, NEPAL) என்ற அமைப்பை நேபாள தேசத்தில் பதிவு செய்ய தேவன் கிருபை செய்தார். ஏப்ரல் மாதத்தில் இந்தியாவிலும், இதனை பதிவு செய்திட தீவிரப்படுகிறோம். இந்த அமைப்பின் வழியாக தேவ திட்டம் மாத்திரம் நிறைவேறிட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

உடன் பயணிக்கும் சகோதரர்கள் தேசத்தில் ஊடுருவி சென்று காணாமல் போனவர்களை தேடும் பணியில் தீவிரிக்கிறார்கள். 2023 டிசம்பர் மாதம் கீழ்கண்ட விபரப்படி அப்படிப்பட்டவர்களுடன் இணைந்து கிறிஸ்து பிறப்பு பண்டிகையை ஆசரிக்க ஆண்டவர் உதவி செய்தார். எங்களுடன் எனது மனைவி மற்றும் 2 பிள்ளைகளும், உத்திரபிரதேசத்தில் பணியாற்றும் 2 மருத்துவர்களும் இணைந்து "இருளிலிருக்கிற ஜனங்களுக்கு, எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியை குறித்து சாட்சி பகர்ந்தது" உற்சாகத்தையளித்தது. இதுவரையில் அந்த ஒளியை (இயேசுவை) குறித்து ஒரு முறையேனும் கேள்விப்படாதவர்கள் 150 பேர்முதல் 350 பேர்வரை ஒவ்வொரு இடத்திலும் கூடி வந்த நிகழ்வு, திறவுண்ட வாசல் எங்கள் முன் வைக்கப்பட்டிருப்பதை தத்ரூபமாக எடுத்து காண்பித்தது நீங்கள் ஜெபித்து, தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்துவதற்காக ஒரு சில படங்களை இங்கு பிரசுரிக்கிறோம்.







வருங்காலங்களில் எங்களுடன் இணைந்து ஊழியம் செய்ய அர்ப்பணித்து வருகை தரும் புதியவர்களுக்கு அதற்கான பயிற்சிகளை அளிக்க உள்ளோம். புதிய பணிதளங்களை உருவாக்கவும், அவ்விடங்களில் வாழ்ந்து வரும் புறந்தள்ளப்பட்ட

பிள்ளைகளை பேணிகாக்கவும் (Marginalized), தடுமாறி போதை மற்றும் இச்சைகளில் சிக்குண்டு அடிமைப்பட்ட நிலையிலுள்ள (Addicted or Abused) வாலிபர்களை சீரமைத்து இயேசு கிறிஸ்துவுக்குள்ளான புது வாழ்வுக்கு அழைத்து செல்லவும், ஆயத்த பணிகளை செய்து முடித்துள்ளோம். தமிழகத்தில் ஏற்கனவே திட்டமிடப்பட்டு நான் கலந்து கொள்ளக்கூடாது என, முன்பு பணியாற்றி வந்த இயக்கத் தலைமையால் கண்டிப்புடன் தடுக்கப்பட்டிருந்த கன்வென்ஷன் கூட்டங்கள், வாலிபர் கூட்டம், குடும்ப கூட்டம், மிஷனரி தரிசன பகிர்வு கூட்டங்கள், மிஷனரி பணிகளில் வாஞ்சை கொண்டவர்களுடன் இணைந்து ஜெப கூடுகைகள் மற்றும் சபை ஆராதனைகளில் நான் கலந்து கொண்டு தேவ செய்தியளிக்க ஆண்டவர் உதவி செய்தார். பல தேவ ஊழியர்கள், விசுவாசிகள், அறியப்படாத இடங்களில் சேவை செய்யும் வாஞ்சை யுடையவர்கள் என பலர் எங்களுக்காக தேவன் நியமித்துள்ள புதிய பாதையின் பயணங்களுக்காக ஜெபித்து எங்களை உற்சாகப்படுத்தினர். சிறப்பு மருத்துவர்கள் பலர் இயன்ற நேரங்களில் எங்களுடன் இணைந்து மருத்துவ பணிகளில் ஈடுவடுவதாக தேவனுடன் உடன்படிக்கை செய்தனர். எங்களது இந்த ஊழிய பயணத்திற்காக பலர் தொடர்ந்து ஜெபிப்பதாக உறுதியளித்தது, தேவன் எங்களுக்கு ஒப்புவித்த இந்த உன்னதமான பணியில் இன்னும் உற்சாகமாக நாங்கள் செயல்பட புதுபெலன் அளித்தது. தொடர்ந்து நீங்கள் ஜெபிப்பதற்காக.


எங்கள் பணிகள் குறித்தான விபரங்களையும் நீங்கள் தேவனை துதித்து மகிமைப்படுத்துவதற்காக அவற்றால் ஏற்பட்ட விளைவுகளையும் தெரியப்படுத்தி கொண்டிருப்போம்.

தேவனுடைய கிருபை ஒவ்வொரு நாளும் உங்களை சூழ்ந்து கொள்வதாக.

இவண்

புதிய பாதையில் தேவனால்

வழிநடத்தப்படும் சகோதரன்



டாக்டர் .C. அசோக்குமார்